போர்வாள்

“போர்வாள்”

சந்தா விபரம்

★

ஓராண்டு	ரூ.	5 0 0
6 மாதம்	ரூ.	2 8 0
தனிப்பிரதி		0 1 6

ஆசிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B A (Hons)

திராவிடர்
வாரத் தாள்

தனி இதழ் அணா 1½
வெளி நாடு அணா 2

வாள் 3 || சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 புரட்டாசி 28
15—10—49 சனிக்கிழமை || வீச்சு 8

ஐயா, இன்னமும் பராமுகம் ஏனையா ?

மில்துணிப் போட்டி, கதர் துணிப்போட்டி, வெளிநாட்டுத் துணிப்போட்டி, அதிக நூல் விலை ஆகிய காரணங்களால் தென்னாட்டின் மிகப் பெருந் தொழிலாகிய கைத்தறித் தொழில் மரணப்படுக்கையில் இருக்கிறது. இலட்சக் கணக்கான நெசவுத் தொழிலாளர்களின் வாழ்க்கை வறுமைப் புயலிடைச் சிக்கிய படகாக, வேதனையின் வடிவாக இருக்கிறது. என்றாலும் சென்னை—டில்லி சர்க்கார்கள் கைத்தறி நெசவாளருக்கு உதவிபுரிய இன்னமும் முன்வரக் காணோம். அந்தோ, கொடுமை! கொடுமை! இது மிகப் பெருங் கொடுமை!

கடுங் கோபம் கொள்ளும் கனதனவான்கள்!

கண்ணன் புத்தக அறையிலிருந்து தடதடவென்று சமையலறைக்கு ஓடினான். ஒரு நிமிஷம் நின்றான். மேலும் கீழும் பார்த்தான். அங்கும் இங்கும் கண்களைச் செலுத்தினான். அதையும் இதையும் புரட்டினான். புரட்டிவிட்டு மடமடவென்று படுக்கையறைக்கு வந்தான். தலையணைக் குவியலையும் பஞ்சணை மெத்தையையும் ஒரு 'புரட்டு' புரட்டிவிட்டு மீண்டும் குடுகுடு வென்று புத்தக அறைப்பக்கம் உருண்டோடி வந்தான். மேஜையைத் திறந்தான்; பூட்டினான். பீரோவைத் திறந்தான்—புத்தகங்களைப் புரட்டினான்—கீழே பல புத்தகங்கள் விழுந்தன—எடுத்து வைப்பதற்குக்கூட ஒரு நிமிஷம் நில்லாமல் கூடத்துப் பக்கம் விரைந்தான். அங்கிருந்து உக்கிராண அறைக்குள் புகுந்தான். மாடிக்கு ஓடினான். பம்பரம் போல் அங்கும் இங்கும் சுழன்றான். வீட்டிற்குள்ளேயே நாலு பக்கமும் பறந்து பறந்து அலைந்தான். வினாடிக்கொருமுறை கைக் கெடியாரத்தைப் பார்த்தான். அதைப் பார்க்கப் பார்க்க அவனுடைய பரபரப்பு அதிகமாயிற்று. சுழன்று சுழன்று திரிந்தான். அம்மா, பார்த்தாயா என்றான். தம்பி என் கணக்கு நோட்புக்கைக் கண்டாயா என்று கூவினான். அக்கா நீயாவது கண்டாயா என்றான். அண்ணா நீ எடுத்து வைத்திருக்கிறாயா என்று கூக்குரலிட்டான். இவன் அலைச்சலையும் திரிச்சலையும் கண்டான் அங்கு வந்த அவன் நண்பன் கோபாலன். அவனுக்குச் சிரிப்பு வந்தது. "எத்தனை நாளைக்குக் கண்ணா நான் கூறுவது! உன் புத்தகங்களை ஒரு இடமாக வையப்பா வையப்பா என்று! இதோ பார் இப்படி அலைகிறாயே, மூலைக்கு ஒரு புத்தகமாக விசிறி எறிந்துவைப்பதால் தானே அலைகிறாய்! புத்தகங்களை ஒழுங்காக, வரிசையாக, அடுக்கடுக்காக, மேஜையிலோ பீரோவிலோ வைத்திருந்தால் இப்படி அலையவும் வேண்டாம், அந்தப் புத்தகம் இல்லையே இந்தப் புத்தகம் காணோமே என்று தேடவும் வேண்டாம்" என்றான் கோபாலன். கண்ணனோ "புத்தி சொல்ல வந்துட்டார்டா இவரு, புத்தி!" என்று சொல்லிச் சீறி விழுந்தான் கோபாலன் மீது. "கணக்கு நோட்புக் காணம்டான்னா அதைத் தேடிக் கொடுக்க வகையில்லே! யோசனை கூற வந்துட்டாரு மகாப் பெரியவரு மாதிரி! போடா போ!" என்று கோபத்துடன் கூவினான். சரமாரியாக வசைமொழிகளை அள்ளி வீசினான். கோபம் பிறந்ததே தவிர கண்ணனுக்கு, கோபாலன் கூறுவது நியாயம்தானே, புத்தகங்களை ஒழுங்குற அடுக்கிவைத்தால் இந்த வீண் அலைச்சல் இருக்காதே என்ற எண்ணம் பிறக்கவில்லை.

உண்மையைக் கூறினால் உதட்டைரிச்சல் கொள்ளும் கண்ணனைப் போலத்தான், காங்கிரஸ் கட்சித் தலைவர்களும் காங்கிரஸ் மந்திரி சபையினரும் அவர்கள் செய்யும் மகத்தான தவறுகளை நாம் எடுத்துக் காட்டும்போது கடுங்கோபம் கொண்டு நம் மீது காய்ந்து விழுகின்றனரே தவிர, இவர்கள் கூறுவதும் நியாயம்தானே என்று எண்ணிப் பார்ப்பது கிடையாது.

கடுங்கோபம் கொள்ளும் இந்தக் கனதனவான்களோ மக்கள் நன்மையை மனதில் கொள்வது கிடையாது—இப்படி இருக்கிறீர்களே இது நியாயமா என்று கேட்டாலோ நம்மீது சீறிவிழுகின்றனர்.

தாமாக முன்வந்தும் மக்கள் குறைகளைப் போக்குவதில்லை. இப்படி இருந்தால் நாடு நலமுறுவது எப்படி என்று நாமாகக் கேட்டாலும் கடுங்கோபத்தை நமக்குப் பரிசாகத் தருவதன்றி, தங்கள் ஆட்சி முறையில் உள்ள கோணலை நிமிர்த்திக் கொள்வதில்லை.

மக்கள் மன்றத்தில், இவர்களின் இந்தக் கோணல் போக்கின் விளைவாக, அதிருப்தி வளர்கிறது. காங்கிரஸ் மீதுள்ள பற்று குறைகிறது. நம்ம சர்க்கார் என்ற பாசம் மறைகிறது. முன்னாளில் காங்கிரசுக்கு இருந்த மகத்தான செல்வாக்கும் நற்புகழும் மங்கி மடிகிறது. காங்கிரசா—அது அநீதியின் உறைவிடம், அக்கிரமத்தின் கோட்டை, ஆணவத்தின் சின்னம். பாசீசப் பாசறை என்று வெகுண்டெழுந்து கூறும் நிலைமை மக்களிடையே வேக வேகமாக வளர்ந்து வருகிறது.

காங்கிரஸ் தலைவர்களும் காங்கிரஸ் சர்க்காரும் இந்தக் கடினமான உண்மைகளைக் கண் திறந்து காணவும் மறுக்கிறார்கள். கண்களை இறுக மூடிக்கொள்கிறார்கள். பூனை கண்களை மூடிக் கொண்டால் உலகம் இருண்டா போய்விடும்? இவர்கள் காண மறுக்கிறார்கள் என்பதற்காக கரைந்துவரும் காங்கிரஸ் பக்தி ஓங்கி வளரவா செய்யும்?

தேய் பிறையாகிவிட்டது காங்கிரஸ் பக்தி. ஆம்! ஆனால் வளர் பிறையாகி விட்டது காங்கிரஸ் எதிர்ப்பு.

நாளுக்கு நாள் காங்கிரஸ் மீதும் அதன் ஆதரவுபெற்ற ஆட்சியாளர்கள் மீதும், எதிர்ப்பு, புயலென எழுந்தபடி இருக்கிறது — எட்டுத்திக்கிலிருந்தும்! சற்றேனும் எதிர்பாராத இடங்களிலிருந்தும்! 'நாளுக்கு நாள் நம் காங்கிரஸ் தேய்ந்ததடி அம்மானை' என்று தேசபக்தர் குழாம் பாடியழவேண்டிய நெருக்கடி ஏற்பட்டு விட்டது. காங்கிரஸ் கல்லறை புக வேண்டிய நாள் விரைவில் தான் என்று அரசியல் ஆருடக்காரர்கள் 'எதிர்காலபலன்' கூறத் தொடங்கி விட்டனர்.

காங்கிரஸ் பக்தி குறைந்து வருகிறது என்று நாம் மட்டும் கூறினால் ஏதோ கட்சி மாச்சரியத்தின் காரணமாகக் குறை கூறுகிறோம் என்று இலேசாகக் கூறி, நம் உரையை எளிதாக ஒதுக்கித் தள்ளி விடலாம். ஆனால் இதோ, கனபாடிகளின் ஏடு — தேசபக்தர் குழாத்தின் தனியொரு பத்திரிகை— காங்கிரஸ் இதழ் "கல்கி" தலையங்கம் தீட்டுகிறது, ஆளவந்தார்களே கவனித்துக் கேளுங்கள்:

"எங்கே பார்த்தாலும் ஜனங்கள்

[4-ம் பக்கம் பார்க்க]

எரிமலை உச்சியில் கந்தகக் கிடங்கு!

— ம. சந்தானம் —

சென்னை மாகாணம் தன்னிடம் வதியும் எழுத்தாளர்களை, கவிஞர்களை எந்த முறையில் நடத்திவருகின்றது என்பது நாடறிந்த கேலிக்கூத்து! எவ்வளவு புத்தகங்களில் ஊராள்வோர் கூர்வாள் பாய்ந்திருக்கின்றது என்பது கணக்கிலடங்காது. தியாகிகளாய் ஊர் சுற்றித்திரிந்த போது அடக்கு முறையையும், எதேச்சாதிகாரத்தையும் கண்டித்த காங்கிரஸ் கனவான்கள் ஊராளும் உரிமை பெற்று ஆளவந்தார்களாய் மாறிய பிறகு "அடக்கு முறையன்றி ஏதும் அறியேன் பராபரமே" என்று சிந்துபாடத் தொடங்கிவிட்டனர். இந்தப் பெர்லி பாதையை கம்யூனிஸ்டுகள் கண்டித்தால் 'கத்தியை எடு' என்ற மிரட்டல்! கழகம் தாக்கினால் 'பார் இதோ ஜாமீன்' என்ற உறுமல்! சோஷலிஸ்டுகள் கூறினால் 'காங்கிரஸ் தவிர இந்த நாட்டை வேறெவரும் ஆட்சி செய்யமுடியாது' என்ற கர்ஜனை. இத்தகைய முஸோலினிகள் ஆட்சியில் அதற்குத் தடை, இது பறிமுதல், இவர்மேல் நடவடிக்கை, அவர்மேல் பாதுகாப்புச்சட்டம் என்று கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன நம் செவிக்கு மற்றுமோர் பயங்கர இடிச்சத்தம் கேட்கிறது. இடிச் சத்தமா அது....? இல்லை. இல்லை. எக்காளமிடும் எரிமலைக் குமுறல். என்றைக்கோ வான் நோக்கி வெடிக்கப்போகின்ற எரிமலையின் பயங்கரக் குமுறல் ஒலி!

பாஸ்கர ராவ்!—களி தெலுங்கின் எழுத்தாளரும் கவிஞரும் ஆவார். புகழ்பெற்ற 'மாபூமி' என்றத் தெலுங்கு நாடகம் வரைந்து, அது நாடகமேடைகளில் உலவிய பொழுது கனம் காங்கிரஸ் ஆளவந்தார்களாலேயே பாராட்டப் பெற்ற வெற்றி வாய்ந்த புண்ணியர்! இப்பொழுது........? உள்ளம் உடைந்தவர். நசுக்கப்பட்ட இருதயத்தினர். தான் ஓர் கம்யூனிஸ்டு என்று சந்தேகிக்கப் பட்டதால் கன்னத்திலே 'பளீர் பளீர்' என்று எதிரொலியிட்ட அறைகளைத் தாங்கியவர்! தன் கிழட்டுத் தந்தை தன் கண்ணுக்கு எதிரிலேயே அநியாயமாகத் தாக்கப்பட்ட கோரக்காட்சியைக் கண்டு திகைத்து நின்றவர்! பாஸ்கர ராவ்! அவருடைய நண்பர் ஒருவரிடம் அவர் புகன்றதைக் கேளுங்கள். பாசிச ஆட்சியில் அவருற்ற அல்லலைப் பாருங்கள். அதேபோது நம் மந்திரிமார்கள் முகங்களையும் நினைவுக்குக்கொண்டு வாருங்கள்.

"நான் பிரசித்தி பெற்ற 'மாபூமி'யைத் தயாரித்தவன் தான்! அதைக் கண்ணுற்ற கனம் மந்திரிகள் என்னைப் புகழ்ந்ததும் உண்மைதான்! ஆனால், ஆனால், ஒருநாள் ஒரு இன்ஸ்பெக்டர் என் வீட்டுக்கு வந்தார். 'நீர்தான் பாஸ்கர ராவா?' என்றார்.

'ஆம்' என்றேன்.

'ஏனையா பாஸ்கர ராவ்? ஏன் நீ மாபூமியை எழுதினாய்?' என்று சரமாரியாய்க் கேள்விகள் தொடுத்தார். நான் வாளாயிருந்தேன். 'ஏன் பேசாமலிருக்கிறாய்?' என்று கேட்டார்-நானே பேசவில்லை! உடனே இன்ஸ்பெக்டர் தன் கையை ஓங்கினார். பளீர்!—என் கன்னத்தில் முதல் அறை! பளீர்-இரண்டாவது! பளீர்—மூன்றாவது! பிறகு போலீஸ்காரர்களை விட்டு, வீட்டைச் சோதனையிடச் சொன்னார். சோதனை நடந்தது. தெலுங்கு இலக்கியத்தைப்பற்றி இரண்டு வருடங்களுக்கு மேல் எழுதிய ஆராய்ச்சிக் காகிதங்களை என் கண்முன் கிழித்தனர். எரித்தனர்! நெருப்பு ஜ்வாலைகள் பறந்தன! என் இரண்டு வருட உழைப்பு! என் பொன்னான எழுத்துகள்! அவ்வளவும் சாம்பல்! இதைத்தடுத்த என் வயதான தந்தையை அடித்தனர். நான் இவ்வளவுக்கும் வாய் மூடி மௌனியாய் இருந்தேன்" அவ்வளவுக்கும் வாய் மூடி மவுனியாய் வாளாயிருந்தார் பாஸ்கர் ராவ்! ஆனால்கம்யூனிஸ்ட்என்று சந்தேகிக்கப்பட்டார்! திடீரென்று 'ஸ்டன்ட்' வேலையை ஆரம்பித்து இன்ஸ்பெக்டரை கீழே தள்ளி, ஒரே அடியில் மூன்று பேரை வீழத்தி விட்டு, திகைக்கும் வகையில் அன்டர் கிரவுன்டில் புகுந்து கொள்ளும் 'கம்யூனிஸ்டு' ஆற்றலை அவர் காட்டவில்லை! தன் எழுத்துக்களை ஒருவன் கிழித்து எரித்த போதும் காந்தியாக மாறிஇருந்தார் பாஸ்கர ராவ்! தன் தந்தையை ஒருவன் அநியாயமாக முரட்டுத் தனமாகத் தாக்கிய பொழுதும் மௌனம்! ஆனால் இன்ஸ்பெக்டர் தன் பலங்கொண்ட மட்டும் இழுத்து அறைந்தார்! யாரை....? பாஸ்கர ராவையா...? இல்லை....! சென்னை மாகாணத்தில் பிறந்து வாழும் எழுத்தாளர், கவிஞர் அனைவருக்கும் ஒரு அறை!

[11-ம் பக்கம் பார்க்க]

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸைப்பற்றிப் புகார்கள் சொல்லி வருகிறார்கள்."

"ரயிலிலும் பஸ்ஸிலும் டிராமிலும் தார்சந்திலும் மார்க்கட்டிலும் சந்தையிலும் திருவிழாக்களிலும் — ஜனங்கள் கூடும் இடங்களில் எல்லாம்— காங்கிரஸ் நிர்வாகத்தில் உள்ள ஊழல்கள் பற்றிக் குறை கூறுகிறார்கள்."

"கதர் உடுத்தியவர்கள் கொஞ்சம் தலைகுனியவேண்டி இருக்கிறது."

கேளுங்கள ஆளவந்தார்களே காது கொடுத்துக் கேளுங்கள் சாஸ்திரியார்களின் ஏடுமட்டுமல்ல உங்கள் கட்சிப் பத்திரிகையுமாகிய "கல்கி" கூறுகிறது கண்ணியமான நடையில் கதர் உடுத்தியவர்களெல்லாம் கொஞ்சம் தலைகுனியவேண்டியிருக்கிறது என்று!

இதையேதான் நாங்களும் கூறுகிறோம்—இதைக் கூறிய குற்றத்திற்காகத்தான் எங்கள் ஏடுகளுக்கு ஏடு ரூபா 3000 என்று ஜாமீனும் கேட்டீர்கள் — ஆனால் இதோ உங்கள் ஏடே கூறுகிறது காங்கிரஸ்காரர்கள் தலை குனியவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது என்று! இப்போதாவது சொல்லுங்கள், நெஞ்சில் கைவைத்துச் சொல்லுங்கள், உள்ளது உள்ளபடி சொல்லுங்கள், மனச்சாட்சியை வஞ்சிக்காமல் சொல்லுங்கள், ஆட்சியாளர்களே, நாங்கள் செய்தது குற்றமா? கடுங்கோபம் கொண்டு எங்கள் ஏடுகளின் இருதயத்தின் மீது 3000 ஜாமீன் என்ற ஈட்டிமுனையைப் பாய்ச்சிய கனதனவான்களே, உங்களைத்தான் கேட்கிறோம், உங்கள் ஏடு கூறிடும் இதே உண்மையை எங்கள் ஏடு கூறினால் மட்டும் அது குற்றமா? உங்கள் கட்சி ஏடுகளுக்கு ஒரு நீதி, எங்கள் இயக்க இதழ்களுக்கு வேறொரு நீதியா? இது அடுக்குமா?

கேளுங்கள் ஆட்சியாளர்களே, "கல்கி'யார் மேலும் கூறுகிறார்—:

"காங்கிரஸ் பக்தியும் செல்வாக்கும் பொது மக்களிடையில் குறைந்துவருகிறது என்பதைக் கண்ணில்லாத குருடர்களைத் தவிர மற்றவர்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்."

ஆம்! ஆம்! ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்! ஆனால் ஒப்புக்கொண்ட மாபாவிகள் நாங்கள் என்ற குற்றம் சாட்டித்தான் எங்கள் ஏடுகள்மீது ஜாமீன்பாணம் தொடுத்துவிட்டீர்கள் ஆளவந்தார்களாகிய நீங்கள்! ஆகுமா இப்போக்கு? நியாயமா?

கல்கியார் எழுதியுள்ள அளவுக்குக்கூட எங்கள் ஏடுகளில் கடுமையாக எழுதியதில்லையே கண்ணியவான்களே, என்றாலும் பாணம் எங்கள் ஏடுகள்மீதுதானே விழுந்தது, அறமா இது?

"கல்கி" அப்படியொன்றும் அவசரப்பட்டோ ஆய்ந்தோய்ந்துபாராமலோ கூறிவிடவில்லை. காங்கிரசின் செல்வாக்கு தேய்ந்து வருகிறது என்ற உண்மையை, ஓய்வாக இருந்து, புள்ளி விவரக் கணக்கினைத் தெள்ளிய முறையில் போட்டுப் பார்த்து, நிலைமையை திட்டவட்டமாகவும் ஐயம்திரிபறவும் உணர்ந்து பார்த்த பிறகுதான் கூறியிருக்கிறது, திடீர் முடிவல்ல இது—தீர்க்காலோசனையின் விளைவு. அவசரத் தீர்ப்பல்ல—நிலைமையை கூட்டிக் கழித்துப் பார்த்துக்கூறும் கணக்கு விவரம்!

காங்கிரசின் செல்வாக்கை "கல்கி"யார் எந்தத் தராசைக் கொண்டு எப்படி எடை போட்டுப் பார்த்தார் என்று கேட்கக் கூடும் ஆட்சியாளர்கள். இப்படியெல்லாம் கேட்பார்கள் கடுங்கோபம் கொண்ட இந்தக் கனதனவான்கள் என்று தெரிந்துதானோ என்னவோ கல்கி ஆசிரியர், காங்கிரசின் செல்வாக்கு கரைந்து வருகிறது என்பதைக் கண்டறிய தாம் கையாண்ட முறையையும் முன்கூட்டியே தெரிவித்திருக்கிறார்.

அவர் கூறுகிறார்:—

"மூன்று வருஷத்துக்கு முன்னால் நடந்த சென்னைச் சட்டசபைத் தேர்தலிலே பொது ஜனத்தொகுதிகளிலே காங்கிரசின் சார்பாக நின்ற அபேட்சகர் ஒருவர் கூடத் தோல்வி யடையவில்லை.

"அந்த மாகாண சட்டசபைத் தேர்தலில் வோட்டுக் கொடுத்த வோட்டர்களேதான் ஜில்லா போர்டு தேர்தல்களிலும் வோட்டுக் கொடுத்தவர்கள்.

"ஆனால் ஜில்லா போர்டு தேர்தலில் ஏறக்குறைய நூற்றுக்கு முப்பது ஸ்தானங்களை இழந்துவிட்டோம்.

"நல்லது, ஸ்தானங்களில் மூன்றுக்கு ஒன்று வீதம் இழந்திருக்கிறோம். வோட்டுகளின் விஷயம் என்ன?

"சென்ற சட்டசபைத்தேர்தலில் எதிரி அபேட்சகர்கள் எல்லாருக்கும் சேர்த்துத் தமிழ் நாட்டு வோட்டர்கள் கொடுத்த வோட்டுக்களின் தொகை மொத்த வோட்டுக்களில் 100க்கு 15க்குக் குறைவாகவேயிருந்தது.

"ஆனால் ஜில்லா போர்டு தேர்தல் நடந்த இடங்களில் எல்லாம் விழுந்த மொத்த வோட்டுக்களைக் கணக்கிட்டு அலசி ஆராய்ந்து பார்த்தால், ஏறக்குறைய பாதி வோட்டுக்கள் (தான்) காங்கிரசுக்கு விழுந்திருக்கின்றன. பாக்கிப் பாதி வோட்டுக்கள் காங்கிரசுக்கு எதிராக விழுந்திருக்கின்றன.

"இதை அபிவிருத்தி என்று சொல்லமுடியுமா? முடியாது.

"மூன்று வருஷத்திற்கு முன்பிருந்த அதே நிலைமை என்றாவது சொல்ல முடியுமா? அதுவும் சொல்ல முடியாது. நிச்சயமாகப் பின்னோக்கிச் சென்றிருக்கிறோம் என்றுதான் சொல்ல வேண்டும்."

"கல்கி" ஏட்டாளர் இவ்வளவு தெளிவாகவும் திட்டவட்டமாகவும் கணக்கிட்டுக் கூறுகிறார் காங்கிரசின் செல்வாக்கு கரைந்து போயிருக்கும் உண்மையை! இந்த அளவுக்குக் கூட காங்கிரஸ் வெற்றி பெற்றிருப்பது, கல்கியார் கூறுவது போல, எதிர்ப்புக்கட்சி எதுவும் சரியாக அமைக்கப்பட்டு வேலை செய்யாத நிலையில் ஜில்லா போர்டு தேர்தல்கள் நடந்ததால் தானே தவிர, வேறில்லை.

ஆகவேதான் ஆச்சாரியாரின் ஆசீர்வாதமும் ஆன்ம நேயமும் அமையப்பெற்ற 'அந்தணாளர்' ஏடு அழகுற மொழிகிறது காங்கிரஸ் பக்தியும் செல்வாக்கும் பொது மக்களிடையேகுறைந்து வருகிறது என்பதைக் கண்ணில்லாத குருடர்களைத் தவிர மற்றவர்கள் அனைவரும் ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும் என்று!

இந்த உண்மைநிலையை எடுத்துச் சொன்னால் உள்ளம் கொதிக்கிறது ஊராள வந்தவர்களுக்கு என்று கட்டுரைத் தொடக்கத்தில் நாம் எடுத்து மொழிந்ததைப் போலத்தான் "கல்கி" இதழும் தன் தலையங்கத் தொடக்கத்தில், "காங்கிரஸ் நிர்வாகத்தாரும் காங்கிரஸ் மந்திரி சபையும் செய்யும் சில காரியங்களினால் பொது மக்களுக்கு அதி

அவருக்கு வந்த சந்தேகம்!

நமது நிதி அமைச்சர் கனம் கோபாலர் இருக்கிறாரே, அவர் ஒரு சந்தேகப் பிரியர் போலிருக்கிறது! அதனால்தான் தினம் தினம் ஒவ்வொரு சந்தேகத்தைக் கிளப்பியபடி இருக்கிறார்! ஒரு சந்தேகம் தீர்ந்தால் இன்னொன்று, அந்த சந்தேகம் தெளிந்தால் வேறொன்று, அதுவும் தெளிந்தால் மற்றுமொன்று என்ற 'பாணி'யிலே அவருக்கு புதுப்புது சந்தேகங்கள் தோன்றியபடி இருக்கின்றன, கடைசி கடைசியாக சென்ற செவ்வாய்க்கிழமையன்று அவர் மனதில் ஒரு புத்தம்புதிய சந்தேகம் முளைத்திருக்கிறது. இந்த நாடு இருக்கிறதே, இதுதான் சென்னை மாகாணம், இந்த நாடு இன்னும் 10 அல்லது 20 ஆண்டுகளுக்குப் பிறகாவது பொருளாதாரத் துறையில் அபிவிருத்தி அடையுமா, மக்கள் வாழ்வு வளம் நிரம்பியதாக மாறுமா என்பது சந்தேகம்தான் என்று 8-10-49 அன்று பெல்லாரியில் பேசுகையில் பொன்மொழி புகன்றிருக்கிறார் கனம் கோபாலர். நல்ல வேளை! 10 அல்லது 20 ஆண்டுகளுக்குப் பிறகாவது இந்த நாடு அபிவிருத்தி அடையுமா என்று கேட்டதோடு நின்றாரே கனம் அமைச்சர் 100 அல்லது 200 ஆண்டுகளுக்குப் பிறகாவது அபிவிருத்தி அடையுமா என்று கேட்காமல்! அதுவரைக்கும் அவருக்கு நன்றி செலுத்த வேண்டியதுதான்! ஆனால் ஒன்று! இருபது ஆண்டுகளுக்குப் பிறகாவது இந்த நாடு அபிவிருத்தி அடையுமா என்று அழுகுரல் கிளப்புகிறாரே அன்பர் கோபாலனார், இப்படிக் கூறுவது இவருக்குத்தானே அவமானம், ஏன் இதை எண்ணிப் பார்க்கவில்லை இந்த ஆந்திர நாட்டு அறிஞர் திலகம்? "ஏனையா, நீர்தானே இந்த நாட்டு நிதி அமைச்சர்? இந்த நாட்டு மக்கள் வாழ்க்கையில் இன்பம் தவழும்படி பார்த்துக் கொள்ளத்தானே இலேசாக இருந்த நீர் கனமாக மாறியிருக்கிறீர்? ஆட்சிப் பீடத்தில் ஆனந்தத்துடன் அமர்ந்து கொண்டு இப்படி முகாரி பாடுகிறீரே வெட்கமாக இல்லையா உமக்கு?" என்று மக்கள் இவரை மடக்கிக் கேட்டால் என்ன பதில் கூறுவார் இந்த மாவீரர்? என்ன பதில் கூறுவார்?

—

ருப்தி வளர்ந்து வருகிறது என்று எச்சரிக்கை செய்பவர்களிடம் மேற்படி கன தனவான்களுக்குக் கடுங்கோபம் உண்டாகிறது." என்று எழில் பட இயம்பியிருக்கிறது.

நமையாளும் "நல்லதம்பிகள்" நாட்டு வளர்ச்சிக்கான நல்ல திட்டங்களைத் தீட்டி நேரிய முறையில் நாடாண்டால், ஆளவந்தார்களின் அழுக்கு மூட்டைப்போக்கினை நாம் எடுத்துக் கூறி கண்டனக் கணைகளைத் தொடுக்கவும், அது கண்டு அவர்கள் கடுங்கோபம் கொள்ளும் காட்டு ராஜாக்களாக மாறவுமான வேதனை மிகு நிலைமை நாட்டில் இருக்காதே என்பதை எடுத்து விளக்குவதற்காக கண்ணன் கதையினைக் கூறினோம் நாம்.

ஆனால் கல்கி ஏட்டாளரோ நம்மை விட மிகக் காரமான கதை ஒன்றைக் கூறி கனல் கக்கும் நடையில் கேலி செய்கிறார் காங்கிரஸ் ஆட்சித் தலைவர்களை!

"நுனி மரத்தில் உட்கார்ந்து கொண்டு ஒருவன் அடிமரத்தை வெட்டுகிறான். அவனைப் பார்த்து வழிப் போக்கன் ஒருவன் அப்பனே! வெட்டாதே! வெட்டினால் மரத்தோடு நீயும் சேர்ந்து விழுவாய் என்று எச்சரிக்கை செய்கிறான். எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் வெட்டியவன் கிளையோடு கீழே விழுந்து காலை முறித்துக் கொள்கிறான். அவன் அதனால் ஏற்பட்ட கோபத்தில் எச்சரிக்கை செய்த வழிப்போக்கனைப் பார்த்து, அட பாவி, உன் துக்கிரி வாக்கினால் சொன்னாய் அல்லவா? அதனாலேதான் நான் விழுந்துவிட்டேன் என்று சொல்லக்கூடும்." என்று கதை கூறிவிட்டு கல்கியார் கூடவே கூறுகிறார், இப்படித்தானய்யா இருக்கிறது இந்த ஆட்சியாளர்கள் நம்மீது கடுங்கோபம் கொண்டு கூவிக் கதறுவதும் என்று!

நுனி மரத்தில் இருந்துகொண்டு அடி மரத்தை வெட்டும் புத்திசாலிக்கு ஒப்பிடுகிறார் கல்கியார் காங்கிரஸ் சர்க்காரை! என்ன நெஞ்சுத் துணிச்சல்!

அனல் கட்டிகளை அள்ளி வீசுவதுபோல இவ்வளவு கிண்டலையும் கேலியையும் ஆட்சியாளர்கள்மீது வாரித் தெளித்திருக்கும் 'கல்கி'யை சமயம் வாய்ந்தபோதெல்லாம் தட்டிக்கொடுத்து சபாஷ் கூறுகிறார்கள். "நம்ம" மந்திரிகள். ஆனால் கல்கி இதழின் போக்கை விட எவ்வளவோ இனிமையான முறையில், எவ்வளவோ பணிவான வகையில், எவ்வளவோ இங்கிதம் தெரிந்து, மிகமிக சாந்தமான தமிழ் நடையில் கல்கியார் கூறிடும் இதே கருத்தை எடுத்து மொழிந்திடும் நமதியக்க ஏடுகள் மீது இந்த மந்திரிகள் "எடு ரூபா 3000" என்ற விஷப் புகையை வீசுகிறார்கள்!

விசித்திரமாக இல்லையா கடுங்கோபம் கொள்ளும் இந்தக் கன தனவான்களின் இரட்டைப் போக்கு!

—

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

புரிந்திடும் ஏனையோர்மீது ஏசல் பாணங்களை வீசுவதிலும் ஈடுபட்டு விடுவர். அது எதிர்பார்க்கக் கூடியதுதானே! இயற்கையும் அதுதானே!

பாலைவனத்தில் எங்கோ ஒரு மூலையில் ஒரு பழமுதிர் சோலை காணப்பட்டாலும் பாலைவனம் பாலைவனம்தானே! பாலைவனத்தில் ஏதோ ஓர் இடத்தில் ஒரு சோலைவனம் இருப்பதாலேயே பாலைவனம் முழுதுமே ஒரு சோலைவனம் ஆகிவிடுமா என்ன?

—

★ போர்வாள் ★

திருவள்ளுவர் ஆண்டு 1980 புரட்டாசி 28
15—10—49 சனிக்கிழமை

வலை விரிக்கிறது வஞ்சகச் சிலந்தி!

★

"பார்த்தாயா நண்பா பத்திரிகையை?"

"பத்திரிகையைத்தானே! ஆஹா, பார்த்தேன்! பத்திரிகையை மட்டுமா பார்த்தேன், பரத கண்டத்தின் புனிதத் தலைவர் பண்டிட்ஜியின் பாதகமலங்களில் சூட்டப்படும் புகழ்மாலைக் குவியலைப் பார்த்தேன்! ஆயிரமாயிரம் இந்தியர்களின் உள்ளத்தை ஆளும் உத்தமர் நேருவுக்கு ஆறுயிரம் மைல்களுக்கு அப்பாலிருக்கும் அமெரிக்க கண்டம் அஞ்சலி செய்து வணங்கி நின்று அரிய வரவேற்பு அளிக்கும் அற்புதக் காட்சியைப் பார்த்தேன்! அஞ்சா நெஞ்சரே வருக, அண்ணல் நேருவே வருக, அருந்திறல் அறிஞரே வருக, ஆசியாவின் ஜோதியே வருக என்றெல்லாம் அமெரிக்க ஏடுகள் பக்கம் பக்கமாகத் தீட்டும் பாகுமொழிகளைப் பார்த்தேன்! இவரல்லவோ தலைவர், இவரல்லவோ மனிதருள் மாணிக்கம், இவரல்லவோ ஆசியாவின் இருதய பீடம், இவரல்லவோ இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பெருமனிதர் என்று அமெரிக்கத் தலைவர்கள் அடுக்கடுக்காகக் கூறும் ஆனந்த மொழிகளைப் பார்த்தேன்! வேறு எந்தத் தலைவருக்கும் அளிக்கப்படாத மகோன்னத வரவேற்பு, இந்தியா ஈன்றெடுத்த இந்த மாவீரருக்கு மட்டும் அமெரிக்க மக்களால் அன்புடன் அளிக்கப்பட்டு வரும் இன்ப நிலையைப் பார்த்தேன்! குடியாட்சித் தலைவர் ட்ரூமன் அவர்களே நேரில் வந்து நின்று, வானூர்தி நிலையத்தில் நேருஜியை வரவேற்ற புதுமையைப் பார்த்தேன்! ஜவஹர்லால்ஜியின் பயணம் அகில உலக மக்களாலும் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டிய அளவுக்கு அதிமுக்கியத்துவம் வாய்ந்ததென்று அனைவரும் கூறுவர் என அமெரிக்க வானொலி அரிய உரை பகர்வதைப் பார்த்தேன்! மரியாதைக் குண்டுகள் 19 வெடிக்க, சர்க்கார் தலைவர்கள் சரமாரியாக வந்துநிற்க, அமெரிக்க அதிபர்கள் நிரல் நிரலாய்க் கூடி நிற்க, பத்திரிகை நிருபர்கள் சாரை சாரையாக வந்தபடி இருக்க, எண்ணற்ற காமிராக்கள் படப்பிடிப்புச் செய்தபடி இருக்க, தலைவர் ட்ரூமன் புன்முறுவல் பூத்த முகத்துடனே வருக வருக என விளம்பி நிற்க, மோதிலால் புத்திரர், வாஷிங்டன் விமான நிலையத்தில் சென்றிறங்கிய சம்பவத்தைப் பார்த்தேன்! ....பார்த்தேன் நண்பா, பத்திரிகையைப் பார்த்தேன், மாசில்லா மாணிக்கம்—களங்கமற்ற ஜோதி-மகாத்மாவின் வார்சு—மாவீரர் நேருவுக்கு அமெரிக்க உலகம் அளிக்கும் மரியாதையை, வரவேற்பை, பாராட்டை, புகழ்மாலையைப் பார்த்தேன்..........."

"என்னப்பா நண்பா, பத்திரிகையைப் பார்த்தாயா என்று நான் ஒரு வார்த்தை கூறி முடிப்பதற்குள்ளாக நீ ஆயிரம் வார்த்தைகளை அடுக்கத் தொடங்கி விட்டாய்! ஆனந்தம் அவ்வளவு அதிகமோ? மகிழ்ச்சி, மனம் எனும் மாளிகையில் தங்க மறுத்து வார்த்தை எனும் குதிரை ஏறி 'திக்கெட்டும் பறந்தோட விரும்புகிறதோ? களிப்பு, உன் சொல் கேட்க மறுக்கிறதோ? கடல் மடை திறந்தாற் போல விரிவுரை ஆற்றத் தொடங்கிவிட்டாயே, ஏதப்பா இன்னும் சில விநாடிகள் நான் பொறுத்திருந்தால் நீ அமெரிக்காவையே இங்கு அழைத்து வந்து என் கண்முன் நிறுத்திவிடுவாய் போலிருக்கிறதே! ஜவஹர்லால் நேருவுக்குக் கூட, இந்தப் பயணத்தைப்பற்றி, உனக்கிருக்கும் அளவு ஆனந்தம் ஏற்படாது போலிருக்கிறதே! ஏனப்பா, அப்படித்தானே!"

"கேலி செய்வது பிறகு இருக்கட்டும் தோழா! நம் தலைவர் பெருந்தகைக்கு அமெரிக்காவில் அளிக்கப்படும் மகத்தான வரவேற்பைக் கண்டு நம் மனம் மகிழ்ச்சிக் கடலில் துள்ளி விளையாடாமல் இருக்க முடியுமா நீயேதான் கூறு!"

"எப்படியப்பா இருக்க முடியும்? பண்டிட்ஜிக்கு அளிக்கப்படும் வரவேற்பு ஒவ்வொரு இந்தியனுக்கும் அளிக்கப்படும் வரவேற்பு அல்லவா? அந்த வரவேற்பைக் கண்டு பூரிப்படையாமல் இருப்பதற்கு நாம் என்ன மரக்கட்டைகளா? அல்லது உணர்ச்சியற்ற ஜந்துக்களா? அல்லது நேருவுக்கு இவ்வளவு புகழா என்று பொருமைப்படவேண்டிய அவசியத்தில் இருப்பவர்களா? அமெரிக்கா, வேறு யாருக்கும் இதுவரை தந்திராத அளவு பண்டிதருக்கு வரவேற்பை நல்கும்போது நாமெப்படி களிப்புறாமல் இருக்கமுடியும்?"

* * *

தேசீய வட்டாரத்தில், இந்த ஒரு வார காலமாக, மேலே பொறித்துள்ளதைப் போன்ற மகிழ்ச்சி உரையாடல், இன்ப நர்த்தனம் புரிந்தபடி இருக்கிறது.

காங்கிரஸ் தோழர்கள் ஒருவரை ஒருவர் காணும்போது, அவர்களுக்கிடையே பூரிப்பு புன்முறுவல் பூக்கிறது; களிப்பு, கருத்தில் கருப்பஞ்சாற்றைப் பாய்ச்சுகிறது; பெருமிதம், எக்காளமிடுகிறது.

மூவர்ணக் கொடியிலே ஒரு புது ஜொலிப்பு காணப்படுகிறது! ஜெய்ஹிந்த் முழக்கத்திலே ஒரு புது இன்பம் தொனிக்கத் தொடங்கியிருக்கிறது! வந்தேமாதரம் என்னும்போது பாரத புத்திரர்கள் குரலிலே ஒரு புது முறுக்கு காணப்படுகிறது.

காங்கிரஸ் ஏடுகளில் ஒருவித புது 'ஜோர்' — ஆளவந்தார்கள் முகாமில் கொஞ்சம் பூரிப்பு—மந்திரிகள் பேச்சில் சற்று பளபளப்பு—தேசீயவாதிகள் முகத்திலே ஒரு புது இன்பம்—இவை, இந்நாள் நிகழ்ச்சிகள்!

பண்டித நேருவுக்கு, அமெரிக்காவில் அளிக்கப்பட்டுவரும் அதி அற்புதமான வரவேற்பும் வாழ்த்துரையும், பாராட்டும் புகழுரையும், இங்கு, தேசியவாதிகள் உள்ளத்தில், இன்பத்தை — பெருமையை — எக்காளத்தை — பூரிப்பை எழுப்பிய வண்ணம் இருக்கின்றன.

தேசிய வாதிகள் உள்ளத்தில் மட்டுமா, இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் எல்லா மக்களுடைய உள்ளத்திலேயும்தான் பண்டிதருக்குக் கிடைத்துள்ள பெரும் புகழைக் கண்டு பூரிக்கும் பண்பு காணப்படுகிறது.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற முறையிலே அல்ல அவர் அமெரிக்கா சென்றிருப்பது, இந்தியாவின் பிரதமர் என்ற தோரணையில்! எனவே அவருக்கு அமெரிக்கா அளிக்கும் ராஜோபசாரத்தைக் கண்டு பூரிப்படையும் உரிமை இந்தியத் துணைக்கண்டத்தவர் ஒவ்வொருவருக்கும் உண்டு,

அமெரிக்கா பண்டிதருக்குப் புகழ்மாலை சூட்டுகிறது—பண்டிதரைக் கண்டதும் பெருங்களிப்புக் கொள்கிறது — பண்டிதரே வருக வருக என வாழ்த்துகிறது—பண்டிதரின் சிறப்பை, செல்வாக்கை, தீரத்தை திறமையைப் பாராட்டுகிறது — பண்டிதரோ, இந்தியாவின் பிரதமர் — எனவே பூரிப்பு, இந்தியத் துணைக் கண்டத்தவர் அனைவருக்கும் ஏற்படாமலா இருக்கும்?

எனவேதான், பண்டித நேருவுக்கு அமெரிக்கா காட்டும் ஒப்பற்ற மரியாதையைக் கண்டு, காங்கிரஸ் கூடாரத்தைப் போலவே, ஏனைய கட்சி முகாம்களிலும், பெருமையும் களிப்பும் அலை அலையாக எழுகின்றன. எழுவதுதான் முறை. அதுதான் அறம்.

அமெரிக்கா, ஒரு கரத்திலே அணுக்குண்டையும் மற்றொரு கரத்திலே அதனினும் பலம் பொருந்திய பணக் குண்டையும் ஏந்தியிருக்கும் நாடு, உலகத் தலைமைக்கு சோவியத் ரஷ்யாவுடன் போட்டியிடக் கூடிய அளவு பலமும் திறமும் வாய்ந்த ஒரே ஒரு நாடு. பலம் பொருந்திய பிரிட்டிஷ் ஏகாதிபத்தையே தனக்குக் குற்றேவல் புரியக் கூடிய பணியாள் போன்ற நிலைக்கு இறக்கிவைத்த நாடு, ஏராளமான தொழில் பலமும், உலகுக்கெல்லாம் கடன் தரக்கூடிய அளவு பணவசதியும் நிறைந்த நாடு. குவலயத்துத் தங்கமெல்லாம் வணிகத் துறையின் வழியாகச் சென்று மலையெனக் குவிந்திருக்கும் நாடு. மன்னாதி மன்னர்களையும் மண்டியிட்டுப் பணியவைக்கக் கூடிய பெரும் பணம் படைத்த டாலர் குபேரர்கள் வாழும் நாடு. இத்தகைய சர்வ வல்லமை வாய்ந்த ஒரு நாடு, இந்தியாவுக்கு—அதன் பிரதமருக்கு—பிரதமர் நேருவுக்கு இவ்வளவு மரியாதை காட்டுகிறது என்றால், உண்மையிலேயே, இச்சம்பவம், இந்தியாவின் அந்தஸ்தை உயர்த்தும் பண்பு மிகுந்தது என்பது மட்டுமல்ல, நம் அனைவரின் உள்ளத்திலும் பெருமிதத்தை எழுப்பும் பெற்றிமை வாய்ந்ததும் ஆகும்.

எனவேதான் களிப்பு நம் உள்ளத்தைத் தாக்குகிறது.

களிக்கத்தான் வேண்டும் நாம் அமெரிக்கா நம் பிரதமருக்களிக்கும் மகத்தான வரவேற்பைக் கண்டு! பூரிப்பு அடையத்தான் வேண்டும் நாம் நம் பிரதமர் அடைகின்ற புகழை, பாராட்டை, சிறப்பை, செல்வாக்கைக் கண்டு! இன்பக் கேணியில் குளிக்கத்தான் வேண்டும் நாம் பண்டித நேரு அமெரிக்கவானில் அழகு நிலாவென ஒளி வீசும் மாட்சி கண்டு! ஆம் ஆம், ஆனந்தம் பிறக்கத்தான் வேண்டும் நமக்கு, அலை கடல் மீது மிதக்கும் கலமென அமெரிக்க வரவேற்புத் தென்றலில் நீந்துகிறார் நம் நாட்டுப் பிரதமர் என்னும் நற்சேதி கேட்டு.

ஆனால் ஒன்று!

அமெரிக்கா நம் பிரதமருக்கு அளிக்கும் மரியாதை ஒப்பற்றது, ஈடு இணையற்றது, வேறு எந்த நாட்டுத் தலைவருக்கும் தரப் படாதது, சிறப்பு மிக்கது என்ற போதிலும், அமெரிக்கா அளிக்கும் வரவேற்பு அகில உலகத்திலும் நம் நாட்டுக்கு அதிக புகழைத் தேடித் தரும் என்ற போதிலும், அமெரிக்காவின் ''கைலாகு'' மூலம் நம் நாடு உலக மன்றத்தில் இனிச் சற்று உயர்வாகவே மதிக்கப்படும் என்ற போதிலும், இந்த மகத்தான வரவேற்பை ஏற்பாடு செய்திருக்கும் அமெரிக்காவின் உள்ளத்தில் தூய்மை இருக்கிறது என்று நம்மால் கூற முடியாது.

இந்த விருந்துகளும் வைபவங்களும், பாராட்டுகளும் வாழ்த்துரைகளும் பண்டித நேருவிடம் இருக்கும் பாசம் அல்லது பற்றின் காரணமாகத்தான் ஏற்பாடு செய்யப் பட்டவை என்று நாம் புகல இயலாது.

அமெரிக்காவின் உதட்டிலே புன்னகை தவழ்கிறது என்ற காரணத்தாலேயே, உள்ளத்திலே வஞ்சகம் தவழாது என்று நாம் உறுதிகூற முடியாது.

உண்மையிலேயே, இந்தியாவின் மீது அமெரிக்காவுக்கு திடீர்க்காதல் பிறந்து விட்டது என்றோ, இந்தியாவுக்கு உதவி பல புரிந்து, இந்திய வாழ்வை வளமாக்க வேண்டும் என்ற 'தயாள சிந்தை' ஏற்பட்டு விட்டது என்றோ, இந்த தயாள சிந்தை அல்லது திடீர்க் காதல் காரணமாகத்தான் இந்த விருந்துகளும் வைபவங்களும் இவ்வளவு சிறப்புடன் நடத்தப் படுகின்றன என்றோ, யார் கூறினாலும், கூறுபவர் பண்டித நேருவாகவே இருந்தாலும்கூட, நாம் அதை ஒருக்காலும் நம்ப முடியாது.

இந்த விருந்துகளையும் பாராட்டுதல்களையும் வரவேற்புகளையும் வாழ்த்துகளையும் பற்றி சிறிதளவு சிந்திக்கத் தொடங்கியவுடனே, முதலில் ஏற்பட்ட களிப்பு மங்குகிறது. பூரிப்பு அடங்கிவிடுகிறது.

சிந்தனை மேலும் சிறிது வளர்ந்தால் களிப்பு கருகியே விடுகிறது. அதுமட்டுமல்ல—கவலையும் பிறக்கிறது.

உலகச் சூழ்நிலை, அமெரிக்காவின் ஏனைய நடவடிக்கைகள், இந்தியாவின் இன்றைய பொருளாதார துர்ப்பாக்கிய நிலைமை ஆகிய இவ்வளவையும் ஒருபுறம் மனதில் நிறுத்திவைத்து, மற்றொருபுறம் பண்டிதருக்குத் தரப்படும் வரவேற்பையும் நிறுத்தி வைத்துப் பார்த்தால், கவலை அதிகமாகிறது. வேதனை பிறக்கிறது. இந்தியாவின் எதிர்காலம் இருண்டு விடுமோ என்ற அச்சமும் தலைகாட்டுகிறது. களிப்பு அல்லது மகிழ்ச்சியின் சாயல்கூட தென்படமறுக்கிறது.

உலகம் இன்றையதினம் இரு கூறுகளாகப் பிரிந்து கிடக்கிறது, ஒரு புறம் சோவியத் ரஷ்யாவும் அதனைச் சார்ந்து நிற்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் சிவப்புச் சீனாவும் இருக்கின்றன. மற்றொரு புறம் முதலாளித்துவ அமெரிக்கா

(10-ம் பக்கம் பார்க்க)

பழமுதிர்சோலை, பாலைவனத்தில்!

பாலைவனம் என்றாலே பயிர்பச்சைகளை அற்ற பாழும் பூமி, செடி கொடிகள் தோன்ற முடியாத வறண்ட நிலம், வளம் என்பதையே கண்டறியாத வெறும் மணல் காடு என்றுதான் பொருள்! ஆனால் அந்தப் பாலைவனத்திலேயும், எங்கோ ஓர் இடத்தில், ஏதோ ஒரு மூலையில், சில சமயம், ஒரு பழமுதிர் சோலை இருப்பதுண்டு—அதில் வளமும் வாழ்வும் திகழ்வதுமுண்டு.

அடிமை! இந்தச் சொல்லுக்கே சொந்த உரிமை அற்றவன், ஏன் என்று எதிர்த்துக் கேட்கும் பாத்தியதை இல்லாதவன், சொன்னபடி கேட்டு நடக்க வேண்டியவன், என்றெல்லாம்தான் அகராதி பொருள் கூறுகிறது. ஆனால் சிற்சில சமயங்களில் அடிமைகளின் உடலிலேயும் சிம்மத்தின் இரத்தம் ஓடுவதுண்டு. ஆமையென அடங்கிக் கிடந்து ஊமையென வாழும் அவர்கள் வாழ்க்கையிலேயும் புரட்சிப் புயல் வீசுவதுண்டு. புனல் சொரிந்து கிடக்கும் அவர்களுடைய கண்களிலே அனல் பிறக்கும் காட்சியும் உருவாவதுண்டு. சுதந்தரம் சுதந்தரம் என்று நித்த நித்தம் சுதந்தர கீதம் பாடுவோரையும் மிஞ்சும் அளவுக்கு அடிமைகளின் கூட்டத்திலிருந்து ஆக்ரோஷம் எழும்புவதுண்டு.

இருண்ட வானம் என்றால் அந்த வானத்தில் ஒளி இராது, வெளிச்சம் கிடையாது, காரிருள் தான் அரசோச்சுமே தவிர கண்ணைக் கவரும் கவின்பெறு வனப்பு ஏதும் இராது என்பது அனைவரும் அறிந்ததுதான். ஆனால் அந்த இருண்ட வானத்திலேயும் ஒளி உமிழும் நட்சத்திரங்கள் மினுக் மினுக் என்று கண்களைச் சிமிட்டிக் கொண்டு கருத்தினைக் கவரும் விதத்திலே தோன்றிடும் காட்சியும் சிலபல சமயம் நேர்வதுண்டு.

முட்டாள் என்றால் அறியாமையின் அடையாளச் சின்னம், மூடத்தனத்தின் முழு உருவம், அறிவின் ஆழத்தையோ ஆராய்ச்சியின் ஆனந்தத்தையோ அணுவளவும் அறியாத அப்பாவி மனிதன் என்றுதான் எவருமே கூறுவர். ஆனால் அந்த முட்டாள் மனிதனின் பேச்சிலேயும் சில சமயம் முதல் தரமான எண்ணங்கள் நடமாடுவதுண்டு; பேரறிஞர்கள்தம் உள்ளத்திலிருந்து மட்டும் உருண்டோடி வரக்கூடிய சொற்கள் அவனுடைய வறண்ட மூளையிலிருந்தும் சிற்சில நேரங்களில் குதித்தோடி வருவதுண்டு.

கொலை புரிந்து கொள்ளையிடுவதையே தொழிலாகக்கொண்டவன் என்றால் அவனுடைய நெஞ்சிலே ஈவு இரக்கம் இருக்காது, அவனுடைய முகத்திலே பச்சாத்தபம் நடமாடாது, அவனுடைய கண்களிலே அன்பு ஒளி பிறக்காது என்பனவெல்லாம் யாருக்குத்தான் தெரியாது? ஆனால் அந்தப் பாலைவன நெஞ்சிலேயும் எப்போதோ ஒரு சமயம், அத்தி பூத்தாற்போல, கருணை ஒளி மின்னுவதுண்டு; அன்பு பிறப்பதுண்டு; பிறர்மீது பரிவு பாசம் பச்சாத்தாபம் தோன்றுவதுண்டு; ஐயோ பாவம் என்ற சொற்கள் அந்த ஈவிரக்கம் அற்றவனின் நாவினால் உச்சரிக்கப்படும் அபூர்வ சம்பவம் நேர்வதுமுண்டு.

சிற்சில சமயம், பாலைவனத்திலே ஒரு பழமுதிர் சோலை இருப்பதுபோல, அடிமையின் குரலிலே ஆக்ரோஷம் எழுவதுபோல, இருண்ட வானத்திலே எழில் மிகு ஒளி மின்னுவதுபோல, முட்டாளின் மூட நெஞ்சிலிருந்து மூதறிஞருக்கும் தோன்றாத முத்தன்ன கருத்துக்கள் தோன்றி வெளிவருவதுபோல, இந்த வாரம் ஓர் அதிசய நிகழ்ச்சி நிகழ்ந்திருக்கிறது.

இந்திய தேசீய தொழிற் சங்கம், முதலாளிமார்களின் முழு ஆதரவைப் பெற்று ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு ஸ்தாபனம். பிர்லா களிக்க, டாடா பூரிக்க, டால்மியா ஆனந்தப் பண் பாட, தலால் நெஞ்சில் தேனாறு பாய, படேல் துரை, தன் இரும்பு உள்ளத்தால் ஆசீர்வாதம் புரிய, இத்தகு சுபயோக சுப முகூர்த்தத்தில் பிறந்த சிசு, இந்திய தேசீய தொழிற் சங்கம். பண மூட்டைகளுக்குப் 'பராக்' 'பராக்' கூறவும், பிர்லா கும்பலுக்கு வெண் சாமரம் வீசவும், ஆளவந்தார்களுக்கு 'அடியேன் தண்டம்' புகலவும், மந்திரிமார்களைப்பார்த்து தங்கள் சித்தம் எங்கள் பாக்கியம் என்று அடிமை அந்தாதி வாசிக்கவும் தொடங்கப்பட்ட சங்கமே, இது. சர்க்காரின் செல்லப்பிள்ளை—பிர்லாக்களின் தோழன்—பாட்டாளிகளின் கூட்டுச் சக்தியைக் குலைப்பதற்காக வென்றே கண்டு பிடிக்கப்பட்ட கருவி, இந்தச் சங்கம்.

இந்திய தொழிற்சங்கம், உழைப்பாளர் உலகத்தின் இருதயம். அந்த இருதயத்தின் மீது எய்யப்பட்ட — சர்க்காரின் ஆதரவால் எய்யப்பட்ட—ஈட்டி, தேசீய தொழிற் சங்கம்.

இந்திய தொழிற் சங்கம்; இந்தியாவில் உள்ள பாட்டாளிகள் அனைவரும் கூட்டாளிகளாய் இருந்து, தங்கள் வாழ்க்கையை வளமுள்ளதாக ஆக்கிக் கொள்வதற்காக நடத்திவரும் இயக்கம், அந்த உழைப்பவர் உலகத்து ஒற்றுமை முன்னணியைக் குலைப்பதற்காக பிர்லாக் கூட்டமும் ஆட்சியாளர் குழுவும் துவக்கிவைத்த மன்றம் தேசீய தொழிற் சங்கம்.

இந்திய தொழிற் சங்கம், தொழிலாளர் உரிமைக்கான விடுதலைப் போராட்டங்களை நடத்துவதிலும், முதலாளித்துவ முகாமின் முரட்டுப் போக்குகளை குறியடிப்பதிலும், ஆட்சியாளர்கள் 'அந்த பிர்லாக்கள்' பக்கமே ஆலோலம் பாடுவதைக் கண்டிப்பதிலும், உழைப்பவர் வாழ்க்கையை உயர்த்திடும் முறையில் உயர் பணி ஏதும் ஊராளவந்தவர்கள் புரிந்திடாதிருக்கும் உன்னத குணத்தை எடுத்துக் காட்டுவதிலும், சமதர்ம சகாப்தம் உருவானால் மட்டுமே களிப்புக் கதிரவன் உழைப்பவர் உலகில் உதயமாவான் என்பதை விளக்குவதிலும் சென்ற பல ஆண்டுகளாக அரும்பெரும் பணியாற்றி வந்திருக்கிறது.

ஆட்சியாளர்களுக்கும் அன்னவரின் நண்பர்கள் அழகு முதலாளிகட்கும் இது பிடிக்கவில்லை—எப்படிப் பிடிக்கும்—கொசு வலையை நாம் கட்டுவது கொசுவுக்கு இனிக்கவா செய்யும் — எனவே இந்தத் தொழிற் சங்கத்தை எப்படி நசுக்குவது என்று இரு சாராரும் யோசித்தனர், அந்த யோசனையின்

விளைவுதான், தேசிய தொழிற் சங்கம்.

சர்க்காரின் துதிபாடகர்களாக இருக்கவும் முதலாளிகளின் நல்ல பிள்ளைகளாக விளங்கவும் விரும்பியோரை மட்டுமே ஒரு கூட்டமாகச் சேர்த்து, அந்தக் கூட்டத்திற்கு தேசிய தொழிற் சங்கம் என்று பெயரும் சூட்டப்பட்டது—உழைப்பவர் ஒற்றுமையைக் குலைக்கும் சக்தியே, நீ நட நட என்று ஆசீர்வாதமும் செய்யப்பட்டது.

தேசிய சங்கம் தனக்குக் கட்டளையிடப்பட்ட இந்தத் திருப்பணியை தன்னால் இயன்ற அளவு திறமையாகப் புரிந்துவந்தது இதுவரை — இப்போதும் புரிந்துகொண்டுதான் இருக்கிறது. சர்க்கார் சிந்து பாடுவதிலே அது இன்னமும் சளைக்காமல்தான் இருக்கிறது.

ஆனால் திடீரென்று, இந்த வாரம், சில நிமிஷ நேரம் சமதர்ம வாடை வீசியிருக்கிறது இந்தத் தேசிய தொழிற் சங்கத்தில்! ஆச்சரியம் ஆனால் உண்மை!

இந்த சமதர்ம கீதம் மீண்டும் எழுமா தேசிய தொழிற் சங்க மேடையில் — நாம் அறியோம் பராபரமே!! இந்த கீதத்தை இப்போது முழங்கிய குற்றத்திற்காகவே இந்நேரம் இவர்களுடைய "எஜமானர்கள்" இவர்கள் மீது சீறி விழுந்திருப்பரே, சினம் மிகக் கொண்டு சுடுசொல் பல வீசியிருப்பரே, நிலைமை இப்படி இருக்க மீண்டும் சமதர்ம நாதம் இந்த மேடையிலிருந்து எழும் என்று எப்படி நாம் கூறமுடியும்?

"இன்றையதினம் இந்தியாவில் காணப்படும் பொருளாதாரச் சிக்கல்கள் அறுபட்டு சுக வாழ்வு மலரவேண்டுமானால் அதற்குள்ள ஒரே வழி உற்பத்தியை அதிகரிப்பதுமட்டுமல்ல, நாட்டின் செல்வத்தை நாட்டு மக்கள் அனைவருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுப்பதுதான்."

"பிரிட்டிஷார் நாடாண்ட காலத்தில் இருந்த பொருளாதார அமைப்பு இன்னமும் அப்படியே அச்சுக் குலையாமல் இருந்து வருகிறது. எனவேதான் நாட்டில் உற்பத்தியாகும் செல்வத்தில் பெரும் பகுதி முதலாளித்துவ கஜானாவுக்கே போய்ச் சேர்ந்துவிடுகிறது—பாட்டாளிகள் பாடுபட்டும் பலனின்றித் தவிக்கின்றனர். இந்த ஏறுமாறான பொருளாதார அமைப்பு பாட்டாளிகளுக்குப் பலன்தரும் விதத்தில் மாற்றி அமைக்கப்பட்டே ஆகவேண்டும்."

"இந்தியத் தொழிலாளர் இயக்கத்தில் கம்யூனிசம் சோஷலிசம் முதலிய வேற்று நாட்டுத் தத்துவங்கள் நடமாடுகின்றனவே என்று கைகளைப் பிசைந்துகொள்வதால் என்ன பயன்? பொருளாதார அமைப்பு ஏறுமாறாக இருப்பதால்தான் மேற்படி தத்துவங்கள் இங்கே நுழைகின்றன என்பதை நாம் உணர்ந்துகொள்வது மிகவும் அவசியம்."

"நடுநிலையாளர்கள் தந்த தீர்ப்பின் படிக்கூட சில முதலாளிகள் நடக்க மறுத்ததன் விளைவாக தொழிலாளர் உலகில் குமுறல் ஏற்பட்டு, 18 மில்கள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. இவற்றை சர்க்காரே எடுத்து நடத்தவேண்டும், அப்போதுதான் உழைப்பவர் உலகில் புரட்சி ஏற்படாமல் இருக்கும்."

"அமெரிக்கர்களின் சராசரி வருமானத்தைவிட இந்தியர்களின் சராசரி வருமானம் எட்டு மடங்கு குறைவாக இருக்கிறது. ஆனால் சர்க்காரில் உள்ள பெரிய உத்தியோகஸ்தர்களோ அமெரிக்க உத்தியோகஸ்தர்களைப் போலவே அதே அளவு கொழுத்த சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கின்றனர். இது நியாயமில்லை 1200 ரூபாய்க்கு மேல் யாருக்கும் சம்பளம் இருக்கக் கூடாது."

இவ்வளவு கருத்துக்களும் இந்த வாரம் இலட்சுமணபுரியில் கூடிய தேசிய தொழிற் சங்க மாநாட்டில் பேசப் பட்ட சொற்பொழிவுகளிலிருந்து கல்லியெடுக்கப் பட்டவை.

சர்க்காருக்குச் சாட்டையடி, முதலாளிகளின் ஆணவப் போக்குக் கண்டனம், இன்றைய முதலாளித்துவ சமுதாய அமைப்பு ஏன் ஒழிய வேண்டும் என்பதற்கான விளக்கம், சமதர்ம சங்கீதம் —இவ்வளவும் இருக்கின்றன இந்தக் கருத்துரைகளில்.

சாதாரணமாக சமதர்மவாதிகள் என்னென்ன கருத்துக்களைக் கூறுவார்களோ அதே கருத்துக்கள்தான் தேசியத் தொழில் மேடையிலிருந்து இக்கிழமை முழக்கப்பட்டிருக்கின்றன.

எந்தத் தொழிற் சங்கத்தை ஒழிக்க வேண்டுமென்று இந்தத் தேசிய சங்கத்தை ஆட்சியாளர்களின் எண்ணம் உருவாக்கிற்றோ, அதே தொழிற் சங்கம் கூறியிருக்கக்கூடிய அதே கருத்துக்களைத்தான், அந்தக் கருத்துக்கள் பரவுவதைத் தடுப்பதற்காகவே தொடங்கப்பட்ட இந்தத் தேசிய சங்கம் கூறியிருக்கிறது.

பாலைவனத்திலே ஏதோ ஓர் இடத்தில் ஒரு சிறு பழமுதிர் சோலை காணப்படுவதுபோல, அடிமையின் குரலிலே எப்போதோ ஒரு வேளை புரட்சியின் வேகம் தொனிப்பதைப் போல, பரம முட்டாளின் சொற்களிலே என்றைக்கோ ஒரு நாள் எப்படியோ ஒரு நிமிஷ நேரம், உயரிய கருத்துக்கள் ஒரு சில தவழ்ந்திடும் தன்மை போல, சமதர்ம வீணையை உடைத்து நொறுக்குவதற்காகவே தொடங்கிவைக்கப்பட்டிருக்கும் தேசிய "தொழிற்" சங்கம், லட்சுமணபுரியில், இந்தக் கிழமை, அந்த வீணையையே எடுத்து ஒரு சில விநாடிகள், சமதர்ம கீதம் பாடியிருக்கிறது; சர்க்காரின் தவறுகளையும் சாடியிருக்கிறது.

இந்த அறிவுத் தெளிவும், தெளிந்த உள்ளமும், உள்ளத்து உணர்ச்சியும், உணர்ச்சியில் எழுச்சியூட்டிய சமதர்ம எண்ணமும் இந்தத் தேசிய சங்கத்தாருக்கு தொடர்ந்து இருக்காது. இருக்க முடியாது. ஆடு தின்னும் புலையா, உனக்கும் சிதம்பர தரிசனமோ என்று ஆணவத்துடன் கேட்டானாமே நந்தனைப் பார்த்து அன்றைய தினம் அவனுடைய ஆண்டை, அதுபோலத்தான், இந்தத் தேசிய சங்கத் தலைவர்களைப் பார்த்து, அவர்களை ஆட்டிவைக்கும் சூத்திரதாரிகள் — சர்க்காரும் பிர்லாக் கூட்டமும் — "தொண்டு செய்யும் அடிமை! உனக்கும் சமதர்ம நினைவோடா?" என்று கடுங் கோபத்துடன் முழக்கமிடுவர். இவர்களும், 'இல்லை இல்லை ஐயன்மீர்! இனி அப்படிப் பேசமாட்டோம் ஐயன்மீர்' என்று மன்னிப்பு வெண்பா வாசித்துவிட்டு, மீண்டும், வழக்கம்போல், சர்க்காருக்கு ஜே போடுவதிலும் நம்ம சர்க்காரே சர்க்கார் நல்ல சர்க்கார் என்று துதி பாடுவதிலும், சமதர்ம புரிக்குத் தொழிலாளரை அழைத்துச் செல்லும் தூயபணி

(5-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வும், அதன் ஆணைப்படி நடந்து தீர வேண்டிய நிலையில் இருக்கும் பிரிட்டனும் இவற்றைச் சேர்ந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளும் இருக்கின்றன.

சோவியத் முகாம், ஒன்று!

அமெரிக்க முகாம், மற்றொன்று!

இந்தியா, இதுவரை, இந்த இரு போர் முகாம்களிலே, எதிலும் சேராமல்தான் இருந்துவருகிறது.

இந்தியாவை, தன் முகாமுக்கு இழுத்துத் தீர வேண்டிய அவசியத்தை, அமெரிக்கா மிக நன்றாக உணர்ந்திருக்கிறது.

மற்றொரு உலகப் போர் மூளுமானால், இந்தியா, அமெரிக்காவின் பக்கம் இருப்பது அதற்கு எவ்வளவோ உதவியாக இருக்கும்.

இந்தியா, ஆசியாவின் நடுவிடத்திலும் முக்கிய இடத்திலும் அமைந்திருக்கிறது என்பது மட்டுமல்ல, ரஷ்யாவுக்கும் ரஷ்யாவின் பக்கமிருக்கும் சிவப்புச்சீனாவுக்கும் பக்கத்திலே இருக்கிறது.

எனவே, இந்தியா, அமெரிக்கக் குழுவிலே தன் பெயரைப் பொறித்துவிடுமானால், அமெரிக்கப் படைகள், இந்தியாவிலிருந்து கொண்டு, ரஷ்யாவைத் தாக்கமுடியும்.

ஐரோப்பிய முனையில், அமெரிக்கக் குழுவைச் சார்ந்திருக்கும் பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, டென்மார்க், மேற்கு ஜெர்மனி ஆகிய இடங்களிலிருந்து இரஷ்யாவைத் தாக்கினால், ஆசியமுனையில், இந்தியா தன் பக்கம் சேர்ந்துவிட்டால், இந்தியாவிலிருந்து கொண்டு ரஷ்யாவைத் தாக்கலாம் என்பது அமெரிக்காவின் ஆசை.

இதற்காகத்தான், இந்தியாவை எப்படியாவது, தன் குழுவிலே சிக்கவைத்துவிட வேண்டும் என்று அமெரிக்கா படாதபாடு படுகிறது.

இது, இந்தியாவை நோக்கியிருக்கும் பேராபத்து.

இந்த ஆபத்து இந்தியாவை விழுங்கிவிட ஒவ்வொரு கணமும் பெரு முயற்சி செய்துவருகிறது.

காங்கிரஸ் ஆளவந்தார்களின் குருட்டுக் கொள்கை காரணமாக, ஏற்கெனவே இந்தியா, பிரிட்டிஷ் காமன்வெல்த் என்ற அடிமைச் சங்கிலியில் பிணைக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டனோ, அட்லாண்டிக் ஒப்பந்தம் என்ற பெயரால் அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் இந்தியா இணைக்கப்பட்டிருப்பதேகூட ஓரளவுக்கு இந்தியாவை அமெரிக்காவின் பக்கம் சாய்க்கக்கூடிய தன்மை வாய்ந்ததுதான்.

இந்த ஆபத்து போதாதென்று, இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்காக என்று கூறி இந்திய ஆளவந்தார்கள், அமெரிக்காவிடமிருந்து (அமெரிக்க ஆதிக்கத்தில் உள்ள உலக பாங்கியிடமிருந்து) 350 கோடி ரூபாய் கடன் வாங்கியிருக்கிறார்கள். இந்தக் கடனும், ஓர் அளவுக்கு, இந்தியாவை அமெரிக்கத் திசையில் உருட்டிவிடக்கூடிய ஆபத்து மிகுந்ததாகும்.

பிரிட்டிஷ் காமன்வெல்த், 350 கோடி கடன் ஆகிய இந்த இரண்டு ஆபத்துச் சங்கிலிகளையும் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் அறுத்தெறிய வேண்டியது இந்தியாவின் கடமை.

ஆனால் அமெரிக்கா, இந்தச் சங்கிலிகளை அறுத்தெறிய விடாதபடி இந்தியரைத் தடுக்கப் பார்க்கும் என்பதுமட்டுமல்ல, இந்தியாவை திட்டவட்டமான முறையில், தன் குழுவில் இணைத்துவிடக் கூடிய, அழுத்தம் திருத்தமான புதிய அடிமைச் சங்கிலி ஒன்றையோ பலவற்றையோ இந்தியாவின் கால்களில் மாட்டிவிட பெரு முயற்சி செய்யும்.

இந்த ஆபத்திற்கு இந்தியா சிறிதும் இடம் தரக்கூடாது. மிகவும் விழிப்பாயிருந்து, இத் துறையில் அமெரிக்கா செய்யக்கூடிய எவ்வித முயற்சியையும் முறித்து எறியவேண்டும்.

பசிபிக் ஒப்பந்தம் என்ற பெயரால், ஆசியாவில் உள்ள நாடுகளையெல்லாம் ரஷ்யாவுக்கு எதிராக ஒரு கூட்டு முன்னணியில் திரட்ட எண்ணுகிறது அமெரிக்கா.

இந்த ஒப்பந்தத்தில் இந்தியாவின் பெயரையும் சேர்த்துவைக்க, அது பேராவல் கொண்டிருக்கிறது,

பண்டித நேருவின் தற்போதைய பயணத்தை, அமெரிக்கா, இந்த அடிமைச் சங்கிலியை இந்தியாவின் மீது பூட்டிவிடும் திருப்பணிக்காகப் பயன் படுத்த எண்ணுமானால் அதில் வியப்பதற்கொன்றுமில்லை.

இந்தியாவின் இன்றைய பொருளாதார நிலை மிகவும் பரிதாபகரமானதாக இருக்கிறது. மத்திய சர்க்காரிடம் இருக்கும் பணம் வேகமாகக் கரைந்து வருகிறது. புதிய தொழில்களைத் தொடங்கவோ, இருக்கும் தொழில்களைத் தேசியமயம் ஆக்கவோ தேவையான அளவு பணம் சர்க்காரிடம் இல்லை. புதிய தொழில்களைத் தொடங்கக்கூடிய பண பலம் படைத்த சீமான்களோ பணத்தை முடக்கிவைத்திருக்கிறார்கள். புதுத் தொழில்கள் தொடக்கம் ஆகாவிட்டாலோ, இந்தியாவின் வருங்காலம் வளமானதாக ஆகமுடியாது. இந்நிலையில் வெளிநாட்டு மூலதனம் வந்தால் தான் இந்தியாவின் தொழில்கள் உருவாக முடியும். வெளிநாடுகளைப் பொறுத்தவரை அமெரிக்கா ஒன்றுதான், கடன் கொடுத்துதவக்கூடிய செல்வாக்கு நிலையில் இருக்கிறது. ஏராளமாகக் கடன் வேண்டுமானால், இந்தியா, பசிபிக் ஒப்பந்தத்திற்கு இரகசியமாகவாவது சம்மதம் தெரிவித்தாக வேண்டும்—அப்போது தான் கடன் தரமுடியும் என்று அமெரிக்கா வற்புறுத்தக் கூடும்.

இந்தியா வறுமையுற்றிருக்கும் இன்றைய நிலையில், எப்படியாவது இந்தியா வளமுற்றால் போதும் என்ற நினைப்பில், பசிபிக் ஒப்பந்தத்திற்கு ஒப்புக்கொண்டாவது, இந்தியாவின் வளர்ச்சிக்காக அமெரிக்காவிடமிருந்து கடன் பெறுவோம் என்ற நினைப்பு பண்டித நேருவுக்குத் தோன்றக்கூடும்.

அந்த 'நினைப்பு' அவருக்கு உண்டாகும் விதத்திலே, இந்தப் பயணத்தின்போது. அமெரிக்கா, நடந்துகொள்ளக்கூடும்.

அந்த 'நினைப்பை' அவருக்கு உண்டாக்குவதற்காகத்தான், அமெரிக்கா, அவருக்குப் பிரமாதமான வரவேற்பைத் தருவது போலக் காட்டி 'சாகசம்' புரிகிறது என்று நாம் கருதுகிறோம்.

இந்த சாகசத்தை, உள்ளத் தூய்மை என்று கருதி ஏமாந்துவிடக்கூடாது பண்டிதர். எந்தக் காரணத்தை முன்னிட்டும் அமெரிக்காவிடமிருந்து மேலும் கடன் பெறுவதோ, பசிபிக் ஒப்பந்தத்திற்கு உடன்படுவதோ, இந்தியாவின் சுதந்தரத்தை இம்மியளவு இழப்பதற்கும் ஒப்புக்கொள்வதோ கூடாது, நிச்சயமாகக் கூடாது,

எலிப்பொறியில் மணம் கமழும் தின்பண்டத்தைக் கோத்து வைப்பது எப்படி எலியைப் பொறியில் விழச் செய்யும் தந்திரமோ, தூண்டில் முள்ளில் சிறுமீனைச் செருகி

வைப்பது எப்படி பெருமீன்களைக் கவரச் செய்யும் முறையோ அப்படித்தான், பண்டித நேருவுக்கு இப்போது அளிக்கப்பட்டு வரும் ராஜோபசாரம், அமெரிக்கக் குழுவில் இந்தியாவை இணைக்கச் செய்வதற்காகக் கையாளப்படும் தந்திரமாகும். இந்தத் தந்திரத்தை தோல்வியுறச் செய்ய வேண்டும் பண்டிதர்.

பண்டித நேரு வரவேற்பை மட்டும் ஏற்றுக் கொண்டு தந்திரத்தை வீழ்த்த வேண்டும், செருகப்பட்ட வடையை மட்டும் தின்று விட்டு பொறியில் சிக்காமல் தப்பி விடும் திறமை மிகு 'எலி'யைப் போல!

வஞ்சகச் சிலந்தி வலையை விரிக்கிறது. சிக்கிவிடக்கூடாது பிரதமர் நேரு.

சிக்கவைப்பதற்காகச் சாகசங்கள் பல புரியும். புன்னகைப் பாணங்களை வீசும். வரவேற்பு மாயங்களைக் காட்டும். சிலந்தி, பலப்பல மயக்க முறைகளைக் கையாளும். இந்தியப்பிரதமர் இந்த சாகசங்களைக் கண்டும் சாய்ந்திடக் கூடாது. மாயங்களைக் கண்டும் மயங்கிடக் கூடாது.

இந்தியாவை, மகத்தான வரவேற்பு என்ற மாயக் கோலைக் கொண்டு, மனம் போனபடி ஆட்டிப் படைக்க எண்ணும் அமெரிக்காவின் நச்சு நினைப்பை மண்டை மேல் அடித்துக் கொன்று விட்டு வர வேண்டும் மாவீரர் நேரு என்பதே நம் ஆசை.

பசப்பு மொழிகள் பலிக்கவில்லை—சாகச சக்தி ஜெயிக்கவில்லை என்ற நிலை ஏற்பட வேண்டும். அமெரிக்காவின் எண்ணம் தோல்வியுற வேண்டும். இந்தியாவின் சுதந்தரம் முழுதும் பழுதற்றதாய் விளங்க வேண்டும். வஞ்சகச் சிலந்தியின் மாயவலை அறுத்தெறியப் பட வேண்டும்.

ஆம்! இந்தியாவை ஏமாற்ற எண்ணும் அமெரிக்காவுக்குத் தக்க பாடம் கற்பித்துவிட்டு வர வேண்டும் பிரதமர் நேரு.

கற்பித்துவிட்டு வருவாரா? அல்லது இவரே ஏமாந்து விடுவாரா?

காலம் பதில் சொல்லும்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏன் — இந்திய உபகண்டத்திலுள்ள எழுத்தாளர் எல்லோருடைய கன்னத்திலும் ஒரு அறை! நேருவின் கன்னத்திலும் தான்! அவரும் ஒரு எழுத்தாளர் தானே! பாஸ்கரராவுக்குத் தரப்பட்ட இழிநிலை அவருக்குமட்டுமல்ல இந்த நாட்டில் ஒரு கவிஞன், ஒரு எழுத்தாளன், எத்தகைய கொள்கையினனாயிருந்தாலும் அவனுக்கும் தான் அந்த நிலை!

சில நாட்களுக்குமுன் பண்டிதர் தன் கட்டுரை ஒன்றில், தான், நாட்டின் பிரதமர் என்ற முறையில் கட்டுரைகள் எழுதவில்லையென்றும் எல்லோரைப் போன்ற எழுத்தாளன் என்ற தோழமை முறையிலேயே எழுதுவதாகவும் குறிப்பிட்டிருந்தார். அவ்வார்த்தைகள் உண்மை உள்ளத்திலிருந்து வெளிப்பட்டவையாயிருந்தால், பொய் கலவாததாய் இருந்தால், தன்னைப் போன்ற சகோதர எழுத்தாளன் துன்புறுத்தப் பட்டதைப்பற்றி என்ன சொல்லுகிறார் நேரு. செய்தி அவருக்குத் தெரியாதா? தெரிந்திருக்க வேண்டுமே. தெரிந்திருந்தும் ஏன் சும்மாயிருந்தார்?

'மனிதர் மாணிக்கம்' நேருவைக் கேட்கிறோம்—முன்னேற்றப் பாதையில் வாழும் எழுத்தாளர்களின் சகோதரன், முடிசூடா மன்னர் நேருவைக் கேட்கிறோம்—"ஐரோப்பாவில் தாண்டவம் புரியும் 'கொடூர வெறியின் காரணமாக எவ்வளவு நிரபராதியான மக்கள் நாசிசப்பிடியிலும் பாசிசப்பிடியிலும் நசுங்கி மறைந்தனரோ" என்று எழுதிய நேருவைக் கேட்கின்றோம் - சுதந்திரச்சுடர் நேருவைக் கேட்கின்றோம்—தோழமை முறையில் ஸ்பெயின் எழுத்தாளர் மாநாட்டுக்கு இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்ற அடலேறு நேருவைக் கேட்கின்றோம்.

ஐரோப்பாவில் அலைந்தாடிய 'கொடூர வெறி' (Malignant-Spirit) ஆந்திராவில் களி நடம் புரிகிறதே ஏன்? ஆந்திராவில் மட்டுமல்ல ஒவ்வொரு மாகாணத்திலும் போலீசார் தங்கள் அடக்குமுறை விளையாட்டால் ஆயிரமாயிரம் ஆராய்ச்சி செறிந்த உள்ளங்களைத் தூள் தூளாய் உடைத்தெறியும் 'உள்ள உடைப்பு' வேலையில் ஈடுபட்டிருக்கின்றார்களே ஏன்? ஒருக்கால் மற்ற எல்லா அதிகாரிகளைப்போல் நேருவும், ஒரு எழுத்தாளனை கம்யூனிஸ்ட் என்ற சந்தேகித்ததற்காக கன்னத்திலறைந்து, காகிதத்தை எரித்து, கிழத் தந்தையை அடித்துத் துன்புறுத்தியது நீதி—நேர்மை என்று எண்ணுகின்றாரா? ஒரு எழுத்தாளனுக்கு நாடு கொடுக்கும் மதிப்பு இதுதானா? பிரிட்டிஷ் ஆட்சி தன் ஆதிக்கவெறியில் நேருவைத் தாக்கி அவருடைய 'சுயசரிதை'யையும் 'இந்தியக்கண்டுபிடிப்பை'யும் அவர் கண் முன்னே கிழித்து எரித்திருந்தால்—அவருடைய மனம் எவ்வளவு பாடுபடும்? தீரர், வீரர் என்று

கோரநாதன்

எழுதியவை:

அவள் ஒரு எக்ஸ்ட்ரா!	0	4	0
அறிவின் கேள்வி	0	3	0
சினிமாவில் கடவுள்கள்	0	4	0
கேட்பாரில்லை	0	2	0

விற்பனைக் கழிவு 25% அனுப்பும் செலவு இனம். ரூபா 1-0-0 M. O. செய்தால் நான்கு புத்தகங்களையும் ரி. தபாலில் அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:

எம். நூரி

14-A. குப்பையர் தெரு,
சென்னை 1.

புகழப்படும் நேரு திருப்பி ஒரு அறை கொடுக்காமலா இருந்திருப்பார்? அவர் இருதயம் இரத்தத்தைக் கசிய விடாமலா இருந்திருக்கும்? அவர் தம் அரிய கண்டு பிடிப்புகள் அனலில் வெந்து கருகும்போது அவர் உள்ளம் எவ்வளவு பாடுபடும்? அந்த உள்ளமும் அந்த இதயமும் பாஸ்கர ராவுக்கு இல்லையா? அவர் குமுறி அழுதிருக்க மாட்டாரா இந்தக் கொடுமைப் போக்கைக் கண்டு? பிறர் உணர்ச்சிகளை உணரும் உள்ளம் ஏன் ஆட்சியாளருக்கு இல்லை?

அய்யோ...! இரண்டு வருடங்களுக்கு மேலாக 'உயிரைவிட்டு' ஆராய்ந்து எழுதியதைக் கண்முன்னே அதன் அருமை தெரியாத அதிகார வெறியர்கள் எரிப்பதைப் பார்த்துக்கொண்டு சும்மாயிருப்பது என்றால்......! அப்பப்பா...! அதைவிட சித்திரவதையே மேலானதன்றோ'

ஹூம்...இவ்வளவும் கேளாக் காதினராகி விட்ட பண்டிதருக்கு எங்கே கேட்கப் போகின்றது? முதலாளிகளின் தோழமையைப் பெறுவதில் முனைந்திருக்கும் அவர் இதனை எங்கே உணரப்போகின்றார்? அவர் போனால் போகிறது. நம் ஆளவந்தார்கள் அப்பொழுது என்ன செய்தார்கள்? எந்தச் சைனாபசாரில் பிஸ்கட் வாங்கித் தின்று கொண்டிருந்தார்கள்? பாஸ்கரராவ் ஒரு'கம்யூனிஸ்ட் அனுதாபியாயிருந்தால் அவரை அறைந்து—காகிதங்களை எரிப்பதற்குப் போலீசாருக்கு அனுமதியுண்டு என்று நினைக்கிறார்களா அந்தப்புண்ணிய புருஷர்களும்? நாங்கள் என்ன கம்யூனிஸ்டா பாஸ்கரராவுக்குபரிந்து பேச? இந்த ஈர உணர்ச்சி கட்சி வேறு பாடுகளைத் தாண்டியது. கட்சி பாகுபாட்டை மறந்து சிந்திக்கவேண்டிய பொருள். இது எந்தக்கட்சியைச் சேர்ந்திருந்தாலும் சேர்ந்திருக்கா விட்டாலும் இந்தச் சம்பவத்தை யாரும் மறக்க முடியாது.

அகிலம்சுற்றும் 'இந்து' எழுதவில்லை! தினமணி கோஷ்டியார் எழுதவில்லை ஆனால் பிளிட்ஸ் வரைந்திருக்கின்றது-ஜூலை 16ம் தேதி பிரதியில் கடைசிப்பக்கத்தில்! வட நாட்டு எழுத்தாளர் கே.ஏ. அப்பாஸ் கதறி இருக்கிறார் இந்தக் காட்டு மிராண்டி சம்பவத்தைக்கேட்டு! 'என் குடை'யையும் 'பாதகமலத்தையும்' மொழி பெயர்த்து வரையும் போது அப்பாஸ் ஒரு பெரிய அறிஞர் கல்கி கும்பலுக்கு! ஆனால் இதைத் தீட்ட மட்டும் மனம் வரவில்லை அந்த ஏட்டுக்கு! தூண்டி விட்டுத் தூபம் போடுவதைத் தவிர வேறு ஒன்றுமே தெரியாது போலும் 'கல்கி' யாருக்கு!

இன்றைக்கு அறை பட்டவர் ஒரு கம்யூனிஸ்டாயிருக்கலாம். நாளைக்கு....வருங்காலத்தில்... ? ஒரு கழகம். பிறகு சோஷலிஸ்டு. அதற்கப்புறம் பரிபூர்ண காங்கிரஸ்! பெர்லின்! ஹிட்லர்! இதுதானா சென்னை மாகாணம் காணும் எதிர் காலப் போக்கு? இது தானா நம் நாட்டின் கதி? நமக்கு வேறு நல்ல நாட்களே கிடையாதா? ...... எல்லோரும் மனிதர்கள்—வாழப் பிறந்தவர்கள்—சகோதர மக்களை வாழ்விக்க வேண்டும் என்ற தூய ஆசை உடையவர்களே எழுத்தாளர்கள். அறிவில் உதித்ததை அவர்கள் ஆராய்ந்து எழுதுகின்றார்கள்-அவர்கள் உள்ளம் கறுப்பல்ல — எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்பதைத் தவிர எழுத்தாளர்கள் விரும்புவது வேறென்ன இருக்கிறது. ஏ! ஆளவந்தார்களே! கொஞ்சம் இரக்கங் கொள்ளுங்கள். நீதியா—நேர்மையா—முறையா—சரியா நீங்கள் செல்லும் போக்கு?—உங்களுக்கு நியாய வழியே தெரியாதா?—எழுத்தாளர்கள் என்ன கேடு செய்கின்றார்கள் நாட்டுக்கு?—மக்களைச் சிந்திக்கச் செய்வது குற்றமா—அவர்கள் சிந்தித்து அறிவு தெளிவது நாட்டுக்கு ஆபத்து என்றால் நீங்கள் ஆளவந்ததின் அர்த்தம் என்ன?—அடக்குமுறை ஆட்சி...பாசிசப் போக்கு—எரிமலைச் சிகரத்தில் கந்தகக் கிடங்கு கட்டுவதைப் போன்றது! சிங்காரத்தோணி ஏறி அலை மோதும் கடலிற் பாய்வதை ஒப்பது. நீங்கள் கடல் மேற் குமிழிகள் என்பதனையும் மறவாதீர்கள்.

பாசறையின் அரிய வெளியீடுகள்

ஈரோட்டுப் பாதை	0	6	0
தமிழன் தொடுத்த போர்	1	12	0
புதியதோர் உலகு செய்வோம்	0	6	0
சித்திர புத்திரன் எழுதுகிறார்	0	6	0
திராவிடஸ்தான் வேண்டாமா?	0	8	0
புரோகிதர் ஆட்சி	0	8	0
திராவிட இந்தியா	1	0	0
ஆரியத்தால் விளைந்த கேடு	0	6	0
திராவிடம் என்றால் என்ன	0	6	0
உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு	0	8	0
ருஷ்ய நாட்டு அழகி	0	8	0
இராமாயணம் நடந்த கதையா	0	3	0
பெண்கள் புரட்சி	0	12	0
பெண்கள் போராட்டம்	0	6	0

[தபாற்செலவு தனி]

பகுத்தறிவுப் பாசறை
147, பவழக்காரத் தெரு
சென்னை, 1.

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
t Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilanchelian B. A. (Hons)